*Summaries in Tamil*
*Intervention 2007, Volume 5, Number 3, Page 270 - 272*

# Summaries in Tamil

**இராக்கிய அகதிகளுக்குக் குழு உளவளத்துணைப் பயிற்ச (peer counselling) - ஜோர்டான் சம்பவ ஆய்வி**

சர்வதேச CARE நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, கட்டுரை ஆசிரியர் 2004 ம் ஆண்டு 49 குழு உளவளத் துணையாளர்களைப் பயிற்றுவித்ததுடன், அவர்களின் வேலையை 2005 ம் ஆண்டுவரை கண்காணித்தார். இக் கட்டுரையானது பயிற்சித்திட்டம்பற்றிய சுருக்கம் மற்றும் உபயோகித்துள்ள யுக்திகளை உள்ளடக்கியதுடன் குழு உளவளத்துணையைத் தொடரும் மனவடு மற்றும் அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு சுய உதவிக் கருவியாக அறிமுகப்படுத்தலின் செயன்முறையையும் உள்ளடக்கியுள்ளது. குழு உளவளத்துணை என்பது தேவை உள்ள மக்களின் சூழ்நிலையில் ஒருவருக்கொருவர் பரஸ்பர ஆதரவு வழங்கல் ஆகும். இது சமூக சேவையின் ஓர் அங்கமாகும். தொடர்ந்து உரிமைகள் மறுக்கப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமையில் உதவி பெறுனரை மையகமாகக் கொண்ட, கலாசார நுட்பம் கொண்ட உளசமூக இடையீடு ஒன்றின் பகுதிகளையும் அதன் சவால்களையும் விளக்குவதே இக்கட்டுரை ஆகும்.

**முக்கிய சொற்கதங்கள்:**
குழுக்கலந்துரையாடல், அகதிகள், தற்காலிக குடியிருப்பு, தொடரும் மனவடு, அழுத்தம், கலாசார இடைக் கரலந்துரையாடல், உதவி பெறுனர் மைய உளசமூக இடையீடு, வலுவூட்டல், மதிப்பீடு

**கொலம்பியாவின் தனிப்பட்ட படையிலிருந்து விலகல் மற்றும் மீழிணைத்தல் நடைமுறை: நடைமுறைப்படுத்தல், சவால்கள் மற்றும் முன்னைய போராளிகளின் பார்வை**

பல வருடகால யுத்த முரண்பாடுகளுக்குப் பின் கொலம்பிய அரசாங்கம் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பெயரிலான ஆயுதக் களைவு, படையிலிருந்து விடுபடல் மற்றும் மீழிணைத்தல் திட்டம் (னுனுசு) ஒன்றை நடைமுறைப்படுத்தியது. இக்கட்டுரை, முன்னைய சட்டத்திற்கு முரணான ஆயுத இடதுசாரி, வலதுசாரி குழுக்களின் போராளிகள், அரச உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் போன்ற சம்பந்தப்பட்ட தரப்பினருடனான நேர்முகங்களை அடிப்படையாகக் கொண்டது. தனிப்பட்ட முறையில் படையிலிருந்து விடுபடுதல் ஓர் வெற்றிகரமான இராணுவத் தந்திரம் என இவ் ஆய்வு தெரிவிக்கிறது. எனினும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக, போராளிகளின் சமூகத்துடனான ஒன்றிணைப்பு, மீழ் ஒன்றிணைப்பு என்பவற்றிற்கு ஆதரவளிப்பது அவசியமாகும். போராளிகள் சமூகத்தில் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியிலும் செயற்றிறன் மிக்கவர்களா வாழ்வதற்குரிய திறன்களை வழங்கவேண்டும். இது அவர்களும் அந் நாட்டுப் பிரஜைகளாக உணரவும் மீழிணைவதைத் துரிதப்படுத்தவும் உதவும்.

**முக்கிய சொற்பதங்கள்:** முன்னைய போராளிகள், மீழிணைத்தல், மீழிணக்கப்பாடு, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**அட்டூழியங்களுக்குப் பின்னரான மீழிணக்கப்பாடும் ஒத்துணர்வும்: சிரொலியோனில் முன்னாள் ஆண்பிள்ளைப் போராளிகளுக்கான நடனம்∴ அசைவுகளால் குணப்படுத்தல**

யுத்தகால அட்டூழியங்களில் ஈடுபட்ட 12 கட்டிளமைப் பருவத்தினருக்கு, ஓர் நேர வரையறைக்குட்பட்ட நடனம்/ அசைவு குணப்படுத்தல் குழு ஒன்று ஆக்கத்திறன் மிக்க குணப்படுத்தல் உள்ளடங்கிய அசைவுகளுக்கான சந்தர்பத்தை வழங்கியது. இது மேலைத்தேச மனவடு குணப்படுத்தலுடன் சமயச்சடங்குகள் கலந்த ஒரு முறையாகும். 16 பகுதிகளைக்கொண்ட உளவளத்துணைக் குழு இளைஞர்களின் ஆக்ரோசமான தூண்டுதல்கிலிருந்து விடுபடவும், ஒன்றுசேர்ந்து செயற்படுதலின் ஆனந்தத்தை உணரும்படியும் செய்தது. செயற்பாடுகள் உருவகப்படுத்தல் மற்றும் உடலசைவுகளின் ஒத்துணர்வை அனுபவிக்கும் வகையிலும், இளைஞர்கள் ஆயுத முரண்பாடுகளில் அவர்களின் ஈடுபாடு குறித்துப் பிரதிபலிப்புச் செய்யவும் ஏற்றவகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இச் செயற்றிட்டம், பங்குபற்றியவர்கள் தாம் எவ்வாறு யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களாகவும் குற்றவாளிகளாகவும் காணப்படுகிறார்கள் என்பதை ஓர் பொது ஆற்றுகை நிகழ்வில் வெளிப்படுத்த வழிவகுத்தது. இது அவர்களின் கமூகத்துடனான மீழிணக்கப்பாட்டிற்கு வழிவகுத்தது.

**முக்கிய சொற்பதங்கள்:** நடனம்/ அசைவுகளுடனான குணப்படுத்தல், ஒத்துணர்வு, மீழிணக்கப்பாடு, சிரொலியோன், உளவளத் துணை, யுத்தம், சடங்குகள்

**முன்னைய காலத்தில் கடத்தப்பட்ட சிறுவர்களுடன் தொழில்புரியும் நிறுவனங்களுக்கான பங்காளர்களாக சமூக தொண்டர்கள்: வட உகண்டா அனுபவம**

20 வருடங்களுக்கு மேலான, பிரபுத்துவத்திற்கு எதிரான இராணுவத்திற்கும் (LRA) உகண்டா நாட்டு இராணுவத்திற்கும் இடையிலான முறண்பாடு அந் நாட்டிடல் பெரும் நெருக்கடியை உருவாக்கியயுள்ளது. பல சமூக அடிப்படையிலான செயற்பாடுகளுக்குப் பொறுப்பேற்கும்படி ஆக்கப்பட்ட சமூகக் குழவினருடன் நெருக்கமாகத் தொழில் புரிவதற்கென, உளசமூகத்துறை நிறுவனங்கள் ஓர் எண்ணக்கருவை உருவாக்கியுள்ளன. இக்கட்டுரை குறிப்பிடப்பட்ட சமூக தொண்டு உளவளத்துணையாளர்களின் (CVCs) அனுபவங்கள் பற்றியதாகும்.

**முக்கியமான சொற்பதங்கள்:** கடத்தப்பட்ட சிறுவர்கள், உளவளத் துணை, தொண்டர்கள

---

**ஓர் புதிய ஆரம்பம், திறந்த அந்தம் கொலம்பியாவின் தனிப்பட்ட முறையில் குழுவிலிருந்து பிரிந்த முன்னைய போராளிகளின் மீழிணைத்தல் - ஆராய்வும் களப் பரிசோதனையும் (டிசம்பர் 2004-ஏப்ரல் 2007)**

இக் கட்டுரையானது கொலம்பிய அரசங்கத்தின் தனிப்பட்ட முறையில் குழுக்களிலிருந்து பிரிந்த முன்னைய போராளிகளை சமூகத்துடன் மீழிணைக்கும் திட்டம் பற்றிய IKV Pax Christi நடாத்திய ஆய்வு பற்றியதாகும். தேசியமட்ட திட்டத்தில் கற்றுக்கொண்ட விடையைங்கள் வட ஊயரஉய வின் சுதேசிய சமூக திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இச் சமூகங்கள் தமது பிரதேசத்தில் வாழ்ந்த



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

போராளிகளை இணைத்துத் தமக்கென சமூகமட்ட மீழிணைப்புத் திட்டங்களை ஆரம்பித்தன. தேசிய அளவிலான திட்டத்திலும் முற்றிலும் மாறுபட்ட திட்டம் கைக்கொள்ளப்பட்டது.

**முக்கிய சொற்பதங்கள்:** கொலம்பியா, தனிப்பட்ட முறையிலான படை கலைப்பு, மீழிணைத்தல், முன்னைய போராளிகள், பிள்ளைப் போராளிகள், மீழிணக்கப்பாடு

---

**டச்சு புகலிட முறையின் சித்திரவதை வாக்குமூலம் மற்றும் சாட்சி சொல்வதன் சுமை**

சித்திரவதையிலிருந்து தப்பி நெதர்லாந்திற்குச் செல்லுவோரின் புகலிட விண்ணப்பங்கள் அனேகம் நிராகரிக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில், புகலிடம் கோருவோரின் சித்திரவதை வாக்குமூலங்கள் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தத் தவறுகின்றன. ஒருமுறை நிராகரிக்கப்பட்டும் பின்னர் சர்வ தேச அம்னெஸ்ரி அமைப்பின் ஆதரவுடன் வழக்குத் தொடரப்பட்டு வதிவட அந்தஸ்து பெற்ற விண்ணப்பங்களை எழுத்தாளர் ஆராய்ந்துள்ளார். ஆரம்ப நிராகரிப்புக்குக் காரணம் குடிவரவு அதிகாரிகள் இப் புகலிடம் கோருவோரை விசாரித்த முறை என்பதே இவரது முடிவாகும். அவ் அதிகாரிகள் சித்திரவதை தொடர்பான விளக்கங்களைக் கேட்க விரும்பாததால் புகலிடம் கோருவோரும் தமது கொடுமையான அனுபவம் பற்றித் தெழிவாக விளக்கமளிக்கவில்லை.

**முக்கிய சொற்பதங்கள்:** சித்திரவதை, புகலிடம், சர்வதேச அம்னெஸ்ரி அமைப்பு, மருத்துவப் பரிசோதனை, இஸ்தான்புல் ஒப்பந்தம்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.